# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

## <u>பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் ரூ.5,000/- கேட்டுப் பெற்ற நில அளவையர் மற்றும் கிராம உதவியாளர் கைது</u>

J.செல்வகுமார் (வயது 49), த/பெ ஜெயபால், நெ.56 A, மாரியம்மன் கோயில் தெரு, கம்மியம்பேட்டை, கடலூர் மாவட்டம் என்பவர் 29.05.2023 ஆம் தேதி கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனு ஒன்று கொடுத்தார். அந்த புகார்மனுவில் தனது மனைவி சுதா என்பவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துதரக்கோரி விண்ணப்பம் செய்துள்ளதாகவும், அதனை தொடர்ந்து திருவந்திபுரம் சுற்றுக்குழு நில அளவையர் பஞ்சநாதன் செல்வகுமாரிடம், பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.5,000/– லஞ்சமாக கேட்டு, அப்பணத்தை கூத்தப்பாக்கம் கிராம உதவியாளர் மாரியம்மாள் அவர்களிடம் கொடுத்துவிட்டால் புகார்தாரர் வேலையை முடித்துவிடுவதாக கூறினார். புகார்தாரர் மற்றும் அவரது மனைவி சுதா ஆகியோருக்கு லஞ்சம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய விருப்பம் இல்லாததால், 29.05.2023 இன்று கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில், புகார்தாரர் செல்வகுமார், திருவந்திபுரம் சுற்றுக்குழு நில அளவையர் பஞ்சநாதன் மற்றும் கூத்தப்பாக்கம் கிராம உதவியாளர் மாரியம்மாள் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் மனு கொடுத்துக்கொண்டார். அவரது புகார் மனு மீது கடலூர் ஊ.த.க. பிரிவு கு.எண்.7/2023 பிரிவு, 7, 12 r/w 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் இன்று 29.05.2023 ம் தேதி வாதி செல்வகுமாரிடமிருந்து ரூ.5,000/– லஞ்சபணத்தை திருவந்திபுரம் சுற்றுக்குழு நில அளவையர் பஞ்சநாதன், கூத்தப்பாக்கம் கிராம உதவியாளர் மாரியம்மாள் என்பவர் மூலம் கேட்டு வாங்கியபோது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கூத்தப்பாக்கம் கிராம உதவியாளர் மாரியம்மாள் மற்றும் திருவந்திபுரம் சுற்றுக்குழு நில அளவையர் பஞ்சநாதன் ஆகியோர்களை கைது செய்து விசாரணைக்காக கடலூர் வட்டாட்சியர் அலுவலகம் அழைத்து சென்று வட்டாட்சியர் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு, பட்டா மாற்றம் தொடர்பான ஆவணங்களை வட்டாட்சியர் முன்னிலையில் கைப்பற்றியும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேலும் லஞ்சம் வாங்கிய வழக்கில் கூத்தப்பாக்கம் கிராம உதவியாளர் மாரியம்மாள் மற்றும் திருவந்திபுரம் சுற்றுக்குழு நில அளவையர் பஞ்சநாதன் ஆகியோர்களை கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். குற்ற அலுவலர்கள் இருவரது வீடுகளிலும் வீட்டுச்சோதனை செய்யப்பட்டு வருகிறது.

# PRESS NOTE

## SURVEYOR AND VILLAGE ASSISTANT ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.5,000/- FOR PATTA NAME TRANSFER

The Complainant Tr.Selvakumar, is residing at No.56A, Mariamman Kovil Street, Kammiyampettasi, Cuddalore District. The complainant applied for patta name transfer for his wife through Pathirikuppam e-sevai maiyam. Tr.Panchanathan, Land Surveyor, Thiruvandhipuram, Cuddalore District, demanded Rs.5,000/- as bribe for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Cuddalore detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 29.05.2023 on the instructions of Tr.Panchanathan, Land Surveyor, Tmt.Mariammal, Village Assistant, Kuthapakkam Village, Cuddalore District received the bribe amount of Rs.5,000/- from the complainant. Both of the accused were arrested.